KANTON solothurn

# குழந்தைகள் பேச விரும்புகிறார்கள்.
# மொழி முக்கியமானது
# எனவே உங்கள் குழந்தைக்கு உதவுங்கள்.

பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கான சட்டப்பூர்வ பாதுகாவலருக்கான தகவல்



Tamilisch



# மொழி ஏன் குழந்தைகளுக்கு ஆரம்பத்திலிருந்தே அவ்வளவு முக்கியமானது?

குழந்தைகளுக்கு எப்போதும் எல்லா இடங்களிலும் மொழி தேவை.
அவர்கள் குடும்பத்தினருடன் பேசுகிறார்கள்.

அவர்கள் மற்ற குழந்தைகளுடன் பேசுகிறார்கள் மற்றும் விளையாடுகிறார்கள்.
மொழிபிற்காலத்திலும் முக்கியமானது. பள்ளியிலும் தொழிலிலும்.

எனவே, வாழ்க்கையின் ஆரம்பகால ஆண்டுகள் மிகவும்
முக்கியமானவை.

உங்கள் குழந்தையை ஆதரிக்கவும்.

**திரைப்படங்கள்: இப்படித்தான் குழந்தைகள் பேசக் கற்றுக்கொள்கிறார்கள்**
**www.kinder-4.ch**
கேன்டன் சூரிச் கல்வி இயக்குநரகத்தின் வலைத்தளத்தில் நீங்கள் பல திரைப்படங்களைப் பார்க்கலாம். இந்தத் திரைபடங்கள் குழந்தைகள் எவ்வாறு பேசக் கற்றுக்கொள்கின்றனர் மற்றும் உங்கள் குழந்தை பேச நீங்கள் எப்படி உதவுமுடியும் என்பதைக் காட்டுகின்றன. உங்கள் குழந்தையுடன் பேசுங்கள் – எப்போதும் எவ்விடத்திலும்

**புத்தங்கள் படித்தல், குழந்தைப் பாடல்களை, கவிதைகளைப் பாடுதல்**
**www.interbiblio.ch**
சுவிட்சர்லாந்தில் அனைத்துக் கலாச்சார நூலகங்கள். இங்கு பல மொழிகளில் பல கலாச்சாரங்களில் இருந்து புத்தகங்கள் இருக்கின்றன. அட்டையில் உங்களுக்கு அருகிலுள்ள நூலகத்தை நீங்கள் கண்டறியலாம்.

**www.vers-und-reim.net**
இங்கு பல மொழிகளில் பல கலாச்சாரங்களில் இருந்து குழந்தைப் பாடல்கள் இருக்கின்றன. உதாரணமாக: சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, குள்ள குள்ள வாத்து, நிலா நிலா ஓடிவா

**www.buchstart.ch**
குழந்தைகள் முதல் முறையாக தேடிப்பெறுதல் – சிறிய குழந்தைகளுடன் புத்தகங்களைப் பார்க்கவும்

**www.sikjm.ch**
எனக்கு ஒரு கதை பரிசளியுங்கள் – பல மொழிகளில் கதைகள்

# நீங்கள் என்ன செய்யலாம்?

| | |
|---|---|
| **1. உங்கள் குழந்தையுடன் அடிக்கடி பேசுங்கள்.** | குழந்தைகளுக்குப் பெரியவர்களுடனான உரையாடல்கள் தேவையானவை.<br>ஆகையால், உங்கள் குழந்தையுடன் அடிக்கடி மற்றும் எவ்விடத்திலும் பேசுங்கள்<br>உதாரணமாக: ஷாப்பிங் செய்யும் போது, உணவருந்தும் போது, இரயிலில்.<br>நீண்ட உரையாடல்களுக்கும் நேரம் ஒதுக்குங்கள்.<br>பேசும்போது ஏற்படும் பிழைகள் மோசமானவை அல்ல.<br>முக்கியமானது என்னவெனில்: நீங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவேண்டும். |
| **2. உங்கள் குழந்தை மற்ற குழந்தைகளுடன் பேசட்டும்.** | குழந்தைகள் விளையாடும்போது மற்றும் பேசும்போது கூட அதிகம் கற்கிறார்கள்.<br>எனவே, அவர்கள் மற்ற குழந்தைகளுடன் தொடர்புகொள்ள வேண்டும்.<br>உங்கள் குழந்தை மற்ற குழந்தைகளுடன் பேச விடுங்கள்.<br>உங்கள் குழந்தை விளையாடவும் கற்கவும் நேரம் ஒதுக்குங்கள். |
| **3. உங்கள் குழந்தைப் பேசுவதைக் கவனமாகக் கேளுங்கள்.** | குழந்தைகள் நம்மிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறார்கள். எனவே, அவர்கள் நம்மிடம் பேச விரும்புகிறார்கள். குழந்தைக்கு பேச நேரம் ஒதுக்குங்கள். உங்கள் குழந்தைப் பேசுவதைக் கவனமாகக் கேளுங்கள். உங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தி கேள்விகளைக் கேளுங்கள். இதன் மூலம் நீங்கள் உங்கள் குழந்தையை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். |
| **4. எல்லாவற்றிற்கும் மொழியைப் பயன்படுத்துங்கள்.** | மொழியின் உதவியுடன், நீங்கள் பல விஷயங்களைச் செய்யலாம், எ.கா: எதையாவது கூறுவது, கதை உருவாக்கிச் சொல்வது, உலகத்தைப் பற்றி விளக்குவது. குழந்தைகளுக்கான சுவாரஸ்யமான விஷயங்களைப் பற்றி பேசுங்கள். உணர்வுகளைப் பற்றியும் பேசுங்கள். அதற்கு நேரம் ஒதுக்குங்கள். ஒரு நீண்ட உரையாடல் உங்கள் குழந்தைக்கு பயனுள்ளதாக இருக்கும் |
| **5. உங்கள் குழந்தைக்கு எழுத்து வடிவத்தை விளக்குங்கள்.** | எல்லா இடங்களிலும் எழுத்துக்கள், எண்கள் மற்றும் படங்கள் உள்ளன: புத்தகங்களில், மொபைலில், டிவியில், போஸ்டர்களில்.<br>இந்தச் சிறிய விஷயங்களை உங்கள் குழந்தைக்கு விளக்குங்கள்.<br>குழந்தைகளுக்கான புத்தகங்கள் அல்லது திரைப்படங்களை அவர்களுடன் இணைந்து ஒன்றாகப் பாருங்கள். அதைப் பற்றி பேசுங்கள். இது உங்கள் குழந்தைக்கு பிற்காலத்தில் பள்ளியிலும் நவீன டிஜிட்டல் உலகத்திலும் உதவும். |
| **6. நீங்கள் நன்கு அறிந்த மொழியைப் பேசுங்கள்** | வீட்டில், உங்கள் குழந்தையுடன் நீங்கள் நன்கு அறிந்த மொழியைப் பேசுங்கள். நர்சரி, விளையாட்டுக் குழு அல்லது பகல்நேரப் பராமரிப்பு மையத்தில், உங்கள் குழந்தை ஜெர்மன் மொழி பேசுகிறார். இந்த வழியில், உங்கள் குழந்தை இரண்டு மொழிகளைக் கற்றுக்கொள்கிறார். இது உங்கள் குழந்தைக்கு ஒரு பெரிய வாய்ப்பு.<br>இது பின்னர் மழலையர் பள்ளி மற்றும் பள்ளியில் உதவுகிறது.<br>உங்கள் குழந்தை ஆரம்பத்திலேயே ஜெர்மன் மொழி பேசும் குழந்தைகளுடன் விளையாடட்டும். உங்கள் குழந்தையுடன் நீங்கள் நன்கு அறிந்த மொழியைப் பேசுங்கள். |

**உங்களுக்குக் கேள்விகள் எதேனும் இருக்கின்றனவா?**
உங்கள் பகுதியில் உள்ள விளையாட்டுக் குழு, நர்சரி அல்லது தாய் அல்லது தந்தை வழிகாட்டுதல் மையத்தில் உள்ளவர்களிடம் கேளுங்கள். நிபுணர்கள் உங்களுக்கு மேலும் உதவுவார்கள்.

மேலும் தகவலுக்கு ஒருங்கிணைப்பு அலுவலகத்தைத் தொடர்புகொள்ளுங்கள்
குடும்பக் கேள்விகள்.

மின்னஞ்சல்: familienfragen@ddi.so.ch,
தொலைபேசி 032 627 22 85
எங்களைப் பற்றி மேலும் அறிய: so.ch/fruehe-foerderung

அறக்கட்டளை:
**Pädagogische Hochschule Thurgau**
**(தூர்காவ் ஆசிரியர் கல்விக்கான உயர்கல்வி நிறுவனம்)**
பயிற்சி, மேலதிக கல்வி, ஆராய்ச்சி
நட்புறவுடனான ஆதரவு:
**சூரிச் மாகாணம், கல்வி இயக்குநரகம்**

*43818 1/26 200*

